உ

சிவமயம்.

எட்டுகுடி

சண்முகக் கடவுள்பேரில் அன்புடனே [illegible]

# முருகப்பண்டாரம் பாட்டு.

உலகில் புண்ணிய பொருள்



மனதில் எண்ணு வோர்க் கருள்.

இஃது No. 36.

ரைஸ்மில் இஞ்சினீயர் J. S. பிராஞ்சீஸ் துரையவர்கள் மாணவரும்

ஞானக் கதிர்வேலாயுதக் கடவுள் கருணையால் எழுதும் அருட்கவி

**M.K.P.M. மனோரஞ்சித நாயனர்**

இயற்றியதை

[illegible]ல்லிங்டன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது

1932. [இதன் விலை 6 பை.

இ26:417
N32
148153

உ

சிவமயம்.

எட்டுகுடி சண்முகக் கடவுள்பேரில் அன்புடனோதிய

# முருகப்பண்டாரம் பாட்டு.

## ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதிகள் திருவாய் மலர்ந்தருளிய

### (ஆசீர்வாதம்)

சண்முகநாதன் தன்னருட் கருணையால்
புண்ணிய வாழ்வைப் பொருந்து மாறிவண்
நண்ணிய நம் மனோரஞ்சித நாயன்
எண்ணிய நலமெலாம் எளிதில் கூடுமால்.

### (காப்பு விருத்தம்)

அருள்தரும் பழனிவேலா அருமறை புகழும் நூலா
பொருள் தரும் புண்யசீலா பொங்கு சோபனக்கல்யாண
இருளறச் செய்யுமப்பா இலக்குமி கடாக்ஷவாசா
சுருளிமாமலை வாழீசா சுதனெனை ரக்ஷிப்பாயே.

பொழுது வீணாகா முன்னே புண்ணியம் தலைமேலேந்தத்
தொழுது நாம் வருவதாலே தொடரும் சௌபாக்ய மென்றும்
பழுதிலா இல்லம்வாய்க்கும் பக்தியால் நத்தி ஞான
விழுது நம்முளத்திலூன்றி விவேக சாகரத்தில் வாழ்வோம்

சண்முகக் கடவுளாலே சகல சம்பத்துண்டாகும்
புண்ணியம் புகுந்தூடாடும் பொய்யறமெய் விளங்கும்
மண்ணில் மானிடர் சொல்லஞ்சா வணக்கமும் இணக்கமாகும்
கண்ணன் மால் மருகனன்பைக் கருத்தினுள் நினைப்பாய் நெஞ்சே

### (திருமால் மருமகனே என்ற மெட்டு.)

கரிமால் மருமகனே கணபதியே குணநிதியே—ஞானக்
கந்தன் மேலருந்தமிழென் சிந்தையில் நினைந்துபாட (கரி)
ஆதிமூலப் பொருளே ஐங்கரனே மெய்ப்பொருளே—உனை
அண்டினோர்க்குதவி செய்யும் தெண்டாயுதபாணி துணை (கரி)
ஆனைமுகத்தையா அளவில்லா புகழையா—சோதி
ஆதிசிவன் புத்திரனே நீதிதவராமலோதும் (கரி)
தூண்டா விளக்கொளியே நற்துதியேயென் மதியே—உன்
தொண்டனென்ற கமகிழ்ந்து அண்டையில் வைத்தருள் தரும் (கரி)
கருணை பெருங்கடலே காப்பாற்றும் உடலுயிரே என்றும்
கண்டுனை வணங்கி தொழ என்றுனை மறவா தருள் (கரி)
ஈசனருளாலே தமிழெழுத புகழ்மேலே—தினம்
இச்சையாய் வணங்கும் மனோரஞ்சித ஐயுன்நிறைய (கரி)

---

(ஆண்டி பண்டாரம் மெட்டு.)

அதோ வாராண்டி வடிவேல்
ஆறுமுகத்தாண்டி (அதோ)
மாதா பிதா குருவாய் வந்த சிவனருளாண்டி
பாதார விந்தம் தொழப் பக்திதரும் வேலாண்டி (அதோ)
குமர குருவாண்டி கூரியவேல் கொண்டாண்டி
அமரர் துயர்நீக்கி நின்ற ஆறுமுகவேலாண்டி (அதோ)
மயிலேறும் வல்லவனும் மாமலைமேல் வீற்றவனும்
கயிலாயம் சுற்றிவந்து கர்த்தனின் முன்நின்றாண்டி (அதோ)
தண்ணிமலை சார்பாண்டி சாமிநாதப் பெருமாண்டி
புண்ணிய ஸ்தலத்தில் புகும் புள்ளிமயில் வேலாண்டி (அதோ)
காவியுடையணிந்து கழுத்திலுத் ராக்ஷமிட்டு
தேவி தெய்வானையுடன் திருநடனம் செய்துயிதோ (அதோ)
இரண்டு பெண்டாட்டியுடன் ரத்தின சிம்மாசனத்தில்
கொண்டாடும் அன்பர்சூழக் கோலமயிலேறியிதோ (அதோ)
கதிர்வேல் காமசைய கையிற் பொற்பிரம்பசைய
அதிர்வெடி மேளதாளம் சங்கு சேகண்டி முழங்க (அதோ)
வள்ளியிடமசைய மறை நான்கும் முன்னசைய
அள்ளிதிரு நீரணிந்த அன்பர்கள் கொண்டாடி தொழ (அதோ)
எட்டுகுடியாண்டி யெந்தன்வினை தீர்த்தாண்டி
எட்டில்லா பாக்கியத்தை மனமகிழ்ந்து தரும்வேலாண்டி (அதோ)
ஆறுமுகமசைய அன்னை உமைவேலசைய
கூறுமடியாரசைய குமரகுரு தேசிகனார் (அதோ)
பன்னிருகரமசைய பார்வேந்த ரேந்திதொழ
உன்னித மயில்மீதேறி உத்தம னென்றென்னை தேடி (அதோ)
கந்தங்குடி யாண்டி கழுகுமலை நின்றாண்டி
எந்தன் வினைதீர்த்தாண்டி எட்டுகுடி வேலாண்டி (அதோ)
தவயோக யோகமிகும் சரஹண பவானந்தனும்
நவவீ ருண்மைகாண நன்மைதர வேணுமென்றே (அதோ)
வளையல் சுமந்தவனும் மங்கைகரம் தொட்டவனும்
கலை யென்றயர்ந்தவனும் கருணை தரவேணுமென்றே (அதோ)
செய்த வினையகற்றும் சிவசுப்ரமண்யனருள்
பெய்த திருவாசகத்தை பேசும் மனோரஞ்சிதன் முன் (அதோ)

புண்ணியம் ! புண்ணியம் !! புண்ணியம் !!!

(வாசங்கலாபமயில் என்ற மெட்டு.)

எட்டுகுடியில் வாழும் செட்டி சிங்கார வேல்
யீசனே யெங்கள் குல குருவோனே—முரு
கேசனே வந்து சுகம் தருவோனே—உலகி
லென்னாள் முழுவதும்—நன்னா ளாகவே
முன்னாள் செய்வினை முற்று மகற்றிட
எப்பப்பா புண்ணியம் வந்தெனை சூழும்—மனம்
ஒப்பப்பா லெட்சுமி யென்னில் வாழும் (1)

தொண்டர் தொழும் பழனி சோலைமலை வாழ்பரஞ்
சோதியே சுப்ரமண்ய குருநாதா—குண
நீதியே அன்பிலெழும் பொற்பாதா—என்
துயரற துணைவரும் சுபயோக செல்வமே
ஜெயம் தரும் புண்ணிய திருவுளமகிமையே—யான்
சொல்லவா இன்று வரை தேடாது—மக
னல்லவா யெனை மறக்கக் கூடாது. (2)

அழகில் மிகும் பொற்பாதக் கழுகுமலை வாழ் கந்த
ஐயனே ஆண்டிவேடம் பூண்டோனே—ஞான
மெய்யனே பக்தனை காத்தாண்டோனே—என்
றருமறை மெச்சிடும் ஆறுமாமுகவனே
குருபரனாகிய குமர பஞ்சாக்ஷர—மூன்
ஆதியே அல்லலறச் செய்வோனே—சொல்லும்
சேதியே அரிந்து அருள் பெய்வோனே. (3)

ஐந்து முகமாகா தென்றாறு முகமாய் வந்த
அப்பனே ஆடு மயிலேற்வோனே—ஞானச்
சுப்பனே சாமிநாதப் பெருமானே—அன்
றற்புத நற்றவ கற்புள வள்ளியுன்
பொற்பத மகிமையை உற்றுறவாகின—நல்
உள்ளம் போலுருதிவைத்து யெனையாளும்—இன்ப
வெள்ளம் போலென்தமிழுன் செவிகேளும். (4)

கோடிசூரிய பிரகாச வடிவேல் காங்
கொண்டவா தொண்டனென வரவேணும்—உமைபா
லுண்டவா வேண்டும் வரம் தரவேணும்
கொடிமலை மீதிலுலாவிடும் சண்முகா
அடியவரன் பெனும் வலைபுகும் வேல்குகா—என்னக்
கோபமோ குழைந்தையின்மே லுமைபாலா—மனஸ்
தாபமோ யானறியேன் மறைநூலா. (5)

செல்வமெழுந்து விளையாடும் திருக்குடைந்தை
தேசிகா கும்பலிங்க க்ஷேத்திரம்—குழந்தை
வேலினு லவதரித்தப் பாத்திரம்—என்றும்
சிந்தையிலுனை தொழும் மைந்தனினு ளம்புகும்
கந்தனே வந்தெனை சொந்தமென் றெண்ணிட—யான்
தேடினேன் திருமகள் வந்தாடாட—தமிழ்
பாடினேன் மனோரஞ்சிதன் உனை நாட.

புண்ணியம் !  புண்ணியம் !!  புண்ணியம் !!!

(பழனிமா மலைதனில் வாழும் என்ற மெட்டு.)

சுருளிமா மலைதனில் வாழும் சுகமே சண்முகமே
சுகமே சண்முகமே  தொண்டருள்ளகமே

துணையென்றுனை நினைந்தேன் துயரற அருளே (சு)
அருளென்ற பூஷணத்தை அணிந்த பொற்பரனே
ஆனந்த சாகரத்தி லமர்ந்த சங்கரனே (சு)
பொருள் மிகும் சுவாமிமலை புண்ணிய க்ஷேத்ரா
போதித்த முதளிக்கும் புகழும் நற்பாத்ரா (சு)
இருளற அருள்தரும் என்குல குருவே
என்று மழியாதயென் னிருதய உருவே (சு)
நம்புமடி யாருண்ணும் நவரசத் தீர்த்தம்
நாதனே யெனக்கூட்ட நலம்பெறும் கோத்ரம் (சு)
உள்ளங் களித்துதொழ உதவிசெய் வேலா
உத்தம னுவதென்றே சத்தியின் பாலா (சு)
என்ன குறை செய்தேனோ யீசனுனறியேன்
என்னோ மானாலும்யான் உனைவிட்டுப் பிரியேன் (சு)
அன்னை யிருவர்களென் அப்பன் பொற்பாதம்
ஆவலாய் நினைந்தவர்க்கருள் பிரசாதம் (சு)
வள்ளிதெய் வானையுடன் மாமயிலேறி
வரவேணும் சிவசுப்ரமண்யாயென் நேரில் (சு)
நத்தியா னெத்தினமும் நான்சொல்லும் வாக்யம்
ரகசிய ரக்ஷகர் மெய்ஞான வேல் பாக்யம் (சு)
தஞ்சமென்றெண்ணு மனோரஞ்சிதன் பாதம்
தமிழரிந்து லெட்சுமி சதா விளையாடும் (சு)

புண்ணியம்! புண்ணியம்!! புண்ணியம்!!!

(நாதசங்கீதப்பொன் மணிமண்டபம் என்ற மெட்டு)

அண்டர் தொழும் பழனி பொற்பாதா
ஆனுக்குபதேசித்தக் குருநாதா
தொண்டனென் றெண்ணிவா லாகாதா
தோத்திரம் செய்வதெல்லாம் கேளாதா
சோதிவேலா சோதிவேலா
சுகந்தரும் புண்ய சிவ சோதிவேலா. (1)

அந்த மிகுந்த புள்ளிமயில் வாகா
அன்பிர்க் கிசைந்து தவம் சிவயோகா
சொந்த தெய்வானை வள்ளி ஸ்தனமோகா
துன்ப வினையகற்றும் மனயூகா
துயர் தீரும் துயர் தீரும்
சுதன் சொலும் மொழியரிந் துயர்தீரும். (2)

சேவத சையமைத்த ஜெய வேலா.
சிந்தை சந்தோழ மிகச்செய் நூலா.
யீவதுன் புண்ய மப்பா உமை பாலா
யென் மனக்குறை நீக்கும் அனுகூலா.
எனையாளும்—எனையாளும்
ஏழை சொல் செவியுட் கொண்டெனையாளும் (3)

நல்லோருளத்தில் புகுந் தாடாடும்
நாதனே வந்து யென் முன்னுறவாடும்
தொல்லை யொழித்தால் மனம் உனை நாடும்
தோகைமயில் மீதேறி விளையாடும்.
துணையாக துணையாக.
சிவசுப்ரமண்யனே நீர் துணையாக (4)

வெட்டி முறித்த தச்சுத் தொழில் மீதும்
விபகார மூடர் சினேகப் பொய் சூதும்
பட்டபா டெல்லாம் இதுவரை போதும்
பழுதிலாவழிபுகத் தமிழோதும்
பலனுங்க பலனுங்க
பலன்தரும் புண்ய சிவப் பலனுங்க (5)

தந்தை மறப்பதுண்டோ மகனுசை
சாதென்ற வாக்கியமிகும் சிவ பூஜை
மைந்தன் மனோரஞ்சிதன் குர லோசை
மாமலைகே ட்கலையோ தமிழ் பாழை
வரவேணும் வரவேணும்
மாமயிலேறி வரந் தரவேணும். (6)

புண்ணியம்! புண்ணியம்!! புண்ணியம்!!!

(ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.)

முருகப் பண்டாரம் என் முன்
வருவதென்னேரம்
வருவீர் வருவீரென வழிபார்த்திருந்துமப்பா
திருவருள் தருவதற்குன் சிந்தையுமிளகாதென்ன (மு)
குருவாகி பொதிகைமலை கும்பமுனிக்குபதேசித்த
முருகா யென்னுயுள்வரை முற்றிலும் முன்புண்ணியம்சூழ (மு)
தெள்ளி தினமாவைத் தேனில் திரட்டி உருட்டிவள்ளி
அள்ளியுன் கரத்திலிட அன்புடனன்றேந்தும் சிவ (மு)
தொண்டர் துயரகற்றும் சோலைமலை வாழுமப்பா
கண்டாவல் கொண்டு தோழக் கருணைதா வேணுமென்றேன் (மு)
பண்டார வேடம்பூண்ட பாக்கிய வேலாயுதனே
கொண்டாடும் அன்பர்மனக் குறையகற்றும் குமாரகுரு
நாராயணன் மருகா நம்பினேன் வேல்முருகா
நேராய் ஷண்முகமாய் வந்து நேர்த்திபுக கீர்த்திதரும் (மு)
இன்னம் யென்மீதிலன்பு யேற்படா காரணம் யேன்
முன்னாள் செய்தவக்குறையோ மூடனறியேனையா
புண்ணிய வீட்டாண்டி புகழ்தரு நல் வேலாண்டி (மு)
தண்ணிமலை வாழாண்டி சாமினுதப் போராண்டி
தடியூன்றி சென்றவனே தையல் மனதறிந்தவனே
கொடிசேவல் பெற்றவனே குமாரவடிவானவனே
அமரர்க்கதிபதியே ஆனந்த சிவஸ்துதியே

சமரச சபையில்வாழும் சச்சிதாநந்த நிதியே
வேட்டுருரு வானவனே வெற்றிதரும் புண்ணியனே
பாடும் மனோரஞ்சிதன் சொல் பாக்யமிகச் செய்தவனே (மு)

புண்ணியம்! புண்ணியம்!! புண்ணியம்!!!

## விருத்தம்.

மெய்விளக் கேற்றுமப்பா மேல்பதி யழைக்குமப்பா
பொய்யறச் செய்யுமப்பா புண்ணியம் பொழியுமப்பா
தெய்வமாய் விளங்குமப்பா தேவனென் றமர்ந்த அப்பா
செய்வினை யகற்றியப்பா செல்வந் தந்தாளுமப்பா (1)

வஞ்சக மகற்றும் சுப்ரமண்யனே மனங்கோணுமல்
கொஞ்ச மென்மீதிலாவல் குமரனே வைப்பீரானல்
நெஞ்சமும் அஞ்சாப்புண்ணிய நிதிகளென் கரத்திலேந்திச்
சஞ்சரித்தன் போடிந்தத் தரணியில் வாழ்கநன்றே (2)

அப்பனே வடிவேலேந்தும் ஆறுமாமுகவனுன்னை
ஒப்பி யென்னுள்ளம்போற்ற உதவிநீர் செய்வதோடு
இப்புவி மீதிலாயுளிருக்கின்ற வரையிலீசா
தப்பித மற்றுவாழ்கத் தனம்பொழிந்தருள் பெய்வேலா (3)

செவிகளீராறு பூண்ட சிவசுப்ரமண்ய னுன்மேல்
கவிகளென்னுயுள்மட்டும் கணக்கிலா தெழுத வாக்கும்
ரவியொளிபோலே வீசும் ஞானபாக்கியம் நிறைந்து
புவியில் நற்புகழுண்டாகப் பூபதி அருள்பெய் வேலா (4)

கருவிலீரைந்து மாதம் காயமும் உயிருந்தோன்றி
உருவுடனிருக்கும் போது உணவளித்தன் போடென்தாய்
திருமுலை யுட்பால்வைத்துச் சீவனுக் கூட்டிவைத்த
முருகனே அமுதளிக்க முற்றிலுன் கடமைதானே (5)

பணமுடை யெனக்கில்லாமல் பரமனே புண்யம் சூழ்ந்தால்
பணமிகும் பதிமேலாகும் பசியறிந்தமுதும் ஊட்டும்
மணமிகும் மனையாள் மைந்தர் மரபினர் மற்றுமுள்ளோர்
குண மிகுந்தன்போ டென்னைக்கூசிடா தேந்துவாரே. (6)

யீந்து ரக்ஷிக்கும் புண்யஇலக்குமி கடாக்ஷமானல்
சார்ந்த சற்குண முண்டாகும் சரீரம் நற்சுகத்தில் வாழும்
யேந்துவா ரெவருமென்னை யிசழ்ந்தினி பேசிடார்கள்
வேந்தனென் றமர்ந்த வெற்றி வேலனே யெனையாளையா (7)

புண்ணியம்! புண்ணியம்!! புண்ணியம்!!!

(வெண்பா)

நீதி வழுவாமல் நிறையோடிருந்து தொழச்
சோதி திரிவுளத்தில் தோன்றுங் காண்—நீதி
குறையா வரமளிக்கும் குமரக் கடவுளை நாம்
மறவா திருப்பது நல் வழி. (1)

வல்லமை யினாலுலகில் வருமோ பெருவாழ்வுச்
சொல்லிவரும் பெரியோர் சொல் தோன்றலையோ—நல்லவனை
மதித்து வருந்தொழிலால் வறுமையறச் செல்வமிகும்
துதித்து வருவதுதான் சுகம். (2)

ஈசனருளிருந்தால் யென்றும் இலக்குமி யாள்
நேசம் நமை சூழ்ந்து நிறையாகும்—வாசம்
பொருந்தும் மனையில் புகும் புள்ளிமயில் வேலவனை நாம்
வருந்தும் வழியில் மனம் வரும் (3)

ஞானப் படிப்பில் புக நத்திவரும் நன் நெஞ்சே
யீனப்படிப்பில் புகயெண்ணாதே—ஞானம்
குன்றில் குடிபுகுந்தக் குமாரக்களஞ்சியமாம்
யென்று மழியாதென்றெண் (4)

தூக்கம் துயர் நீங்கும் துன்பவினை நீங்கும்
யேக்கம் துயர்நீங்கும் இருள் நீங்கும்—ஊக்கம்
சோதி திருவுளத்தில் தோன்றும்படிச் செய்யும்
நீதிவழுவாதானை நினை (5)

புண்ணியம்! புண்ணியம்!! புண்ணியம்!!!

அருட்கவி:

**M. K. P. M.** மனோரஞ்சித நாயனார்,

---

விஜயபுரம் வில்லிங்டன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.